பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 09 2024 **FRIDAY** **6.30 PM**

## மாநில செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் 71 புதிய சாலைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

2. பண்டிகை காலங்களில் இனிப்பு மற்றும் காரவகைகள் கலப்படம் இன்றி பொதுமக்களுக்கு கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. மத்திய அரசின் விஷ்வகர்மா திட்டத்தை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று நான்கு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

தமிழகத்தில் ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் 71 புதிய சாலைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

தஞ்சாவூர் - விக்கிரவாண்டி இடையேயான வழிடத்தடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தேசிய நெடுஞ்சாலைப்பணிகளை சோழாபுரம் அருகே இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாநிலத்தில் தற்போது 60 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சாலைப்பணிகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் தமிழகத்தில் 2 லட்சம் கோடி ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் ஐந்து லட்சம் கோடி ரூபாய் செலவில் 10 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு 27 புதிய பசுமை வழிச்சாலைகள் அமைக்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இதில் தமிழகத்தில் மூன்று பசுமைச்சாலைகள், 10 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச தரத்திற்கு இணையான சாலை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நிதின்கட்கரி கூறினார்.

<<<<<>>>>>

பண்டிகை காலங்களில் இனிப்பு மற்றும் காரவகைகள் கலப்படம் இன்றி பொதுமக்களுக்கு கிடைப்பதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதியுள்ளது.

இனிப்பு மற்றும் கார வகைகள் உற்பத்தியை தொடர்ந்து கண்காணிக்குமாறு, அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பண்டிகை காலங்களில் இவற்றின் தேவை அதிகரிப்பதை கருத்தில்கொண்டு, கலப்படங்கள் செய்ய வாய்ப்புள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப்பொருட்களுக்கான அனைத்து தர நிர்ணயங்களும் கடைபிடிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சென்னையில் ஃபார்முலா – 4 கார் பந்தயம் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பான பணிகள் இன்னும் முடிவடையவில்லை என்று மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இப்போட்டியை நடத்தியதற்காக நன்றி தெரிவிக்கும் விழாவில் அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி அவர் பேசினார்.

போட்டிகளுக்கு முன்னர் இருந்தவாறு சாலைகளை பழைய நிலைமைக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சாலைகளில் அமைக்கப்பட்ட தடுப்புகளை அப்புறப்படுத்துவது, சாலைகளை சரிசெய்வது போன்ற பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<>>>>>

விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

இன்று புதுக்கோட்டையில் மிளகு சாகுபடி குறித்த தொழில்நுட்ப கருத்தரங்கினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

தோட்டக்கலை சார்பில் தென்னை, மிளகு சாகுபடி குறித்தும், மாடித்தோட்டம் அமைப்பது குறித்தும் பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் விஷ்வகர்மா திட்டத்தை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி வானதி சீனிவாசன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்தை தமிழக அரசு புறக்கணிப்பதாக குறை கூறினார்.

18 வகையான தொழில் புரிவோர்கள் மற்றும் கைவினைக்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், இந்த திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்மூலம், நலிந்த கைவினைக் கலைஞர்களுக்கு உரிய பயிற்சி வழங்குவதோடு நிதியுதவியும், உபகரணங்களும் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

இந்த திட்டத்தை அரசியல் காரணங்களுக்காக தமிழகம் மற்றும் மேற்குவங்க மாநிலங்கள் புறக்கணிப்பதாக திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்று இன்று சென்னை திரும்பிய தங்கவேலு மாரியப்பனுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தங்கவேலு மாரியப்பன், பாராலிம்பிக் போட்டியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பதக்கம் வென்றது பெருமையளிப்பதாக கூறினார்.

*(வாய்ஸ் பைட் - மாரியப்பன் - 32 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தேசிய ஊட்டச்சத்து வார விழாவின் ஒருபகுதியாக சென்னை அகில இந்திய வானொலியின் செய்திப்பிரிவு சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

“உணவும் - இதய நலமும்” என்ற தலைப்பிலான இந்த நிகழ்ச்சியில், பிரபல இதய மருத்துவர் வி சொக்கலிங்கம் மற்றும் எமது செய்தி ஆசிரியர் எஸ் ஜாய் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சி நாளை காலை மணி 10.02 முதல், ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் கிராமத்தில் மத்திய அரசு திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட 60 வார்டுகளிலும் நாளை மறுநாள் பகுதி சபா கூட்டம் நடத்தப்படும் என்று ஆணையர் திரு மதுபாலன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள் குறித்து ஆட்சியர் திரு பிரபுசங்கர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் விசூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<>>>>>

மயிலாடுதுறை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற கல்விக்கடன் வழங்கும் முகாமினை தொடங்கிவைத்த ஆட்சியர் திரு மகாபாரதி, 7 கோடியே 71 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடனுதவிகளை மாணவர்களுக்கு வழங்கினார்.

<<<<<>>>>>

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி மற்றும் அம்பாசமுத்திரத்தில் உள்ள குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் வாக்குச்சாவடிகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக நெல்லை மாவட்ட ஆட்சியர் திரு கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று நான்கு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஈட்டி எறிதல் பிரிவில் தீபிகா தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டத்தில் பிரியான்ஷூ தங்கப்பதக்கத்தையும், ராகுல் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் ஆயிரத்து 500 மீட்டர் ஓட்டத்தில் வினிதா தங்கப்பதக்கத்தையும், **Laxita** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இந்தியா, மகளிர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தையும், ஆடவர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றது.

<<<<<>>>>>

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 14-21, 21-10, 21-14 என்ற செட் கணக்கில், **Sathish Kumar Karunakaran – Aadya Variyath** இணையை வென்றது,

<<<<<>>>>>

பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anmol Kharb** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-18, 21-12 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Irina Amalie Andersen** –ஐ வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் **Ishaan Bhatnagar – Sankar Prasad Udhay Kumar** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<>>>>>**

உலக சைக்கிள் சாம்பியன் போட்டியில் பங்கேற்க இந்தியாவை சேர்ந்த **Ronaldo Singh, Esow Alben, Rojit Singh, David Beckham, Harshveer Sekhon** மற்றும் மீனாட்சி தகுதி பெற்றுள்ளனர்.

இப்போட்டி டென்மார்க்கில் வரும் 16-ஆம் தேதி தொடங்கி, 20-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

**<<<<<END>>>>>**